**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**(CHAPTER XXIII BNSS)**
**CC.NO- 13/2022**
**Dated :27.05.2026**
**Deposition of witness for : P.W.2**

**List of Witness LW4 Examined as PW2 (Eye Witness)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | காமராஜ் | வயது | : | 43 |
| தந்தை பெயர் | : | செல்வராஜ் | தாலுகா | : | புதுக்கோட்டை |
| கிராமம் | : | கல்லுக்காரன்பட்டி | தொழில் | : | விவசாயம் |

Solemly affirmed by Tmt. Vijayalakshmi, Junior Assistant of this court in accordance with the provisions of Act X of 1873.
**Counsel present.**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2025/F1. DATED 21.02.2025 the identify of the witness verified with their identity card.**
**Aadhar Card of the Witness verified.**

(1 முதல் 5 எதிரிகள் ஆஜர் இல்லை. அவர்களது சார்பில் பிரிவு 355 BNSS- ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது)

**சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு**

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். எதிரிகள் சரவணன், உதயசூரியன், வினோத், பிரபாகரன், ராமன், குமார் ஆகியோரை எனக்கு தெரியும். அ.சா.1 முத்து மற்றும் சாட்சி கருப்பையாவை எனக்கு தெரியும். கடந்த 22.09.2021 காலை 08.30 மணியளவில் நானும் சுப்பிரமணியன் என்பவரும் சொந்த வேலையாக சென்று கொண்டிருந்தோம். அப்போது புதூரில் சித்திரவேல் வீட்டிற்கு அருகில் கூட்டமாக இருந்தது. நாங்கள் சென்று பார்த்தபோது பஞ்சாயத்து தலைவர் சாந்தி என்பவரின் கணவர் முத்து என்பவரும் அங்கு இருந்தார். நாங்கள் என்னவென்று கேட்டோம். சித்திரவேல் அவரது வீட்டிற்கு குடிநீர் இணைப்பு அமைத்து தரும்படி முத்துவிடம் கேட்டுள்ளார். அவரும் அமைத்து தருவதாக கூறியுள்ளார். அப்போது எதிரி சரவணன் அங்கு வந்து முத்துவின் சட்டையை பிடித்து உனக்கு என்னடா இங்க வேலை புண்ட மகனே என்று அசிங்கமாக திட்டி சட்டையை கிழித்துவிட்டார். முத்து ஏன் சட்டையை கிழிக்கிறாய் என்று கேட்டபோது அருகில் இருந்த கட்டையை எடுத்து முத்துவின் இடது கையிலும், இடது பக்க மார்பிலும் அடித்துவிட்டார். நாங்கள் சண்டையை விலக்கிவிட்டு கொண்டிருந்தபோது மாரி என்கிற உதயசூரியன் அங்கு வந்து முத்துவை கெட்ட வார்த்தையால் திட்டி, சட்டையை பிடித்து அடிக்க வந்தார். அப்போது சாட்சி கருப்பையா அதனை தடுத்தபோது மாரி என்ற உதயசூரியன் கட்டையால் கருப்பையாவை இடது பக்க கையிலும், இடது பக்க கண்ணிற்கு கீழேயும் அடித்துவிட்டார். ஊர் ஆட்கள் சத்தம் கேட்டு

அங்கு ஓடி வந்தார்கள். அப்போது எதிரி சரவணன் கையில் வைத்திருந்த கட்டையை காட்டி உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என மிரட்டி விட்டு அனைவரும் அங்கிருந்து ஓடிவிட்டார்கள். பின்னர் காயம்பட்ட முத்து மற்றும் கருப்பையா அவர்கள் சொந்த காரில் மருத்துவமனை சென்றார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். போதிய வாய்ப்பு அளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

**மறுவிசாரணை– இல்லை.**

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம், என்னால் தட்டச்சுருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு, விளக்கி கூறப்பட்டு, சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.**

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.05.27 03:35:25 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வக்கோட்டை.**

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**(CHAPTER XXIII BNSS)**
**CC.NO- 13/2022**
**Dated :27.05.2026**
**Deposition of witness for : P.W.3**

**List of Witness LW5 Examined as PW3 (Eye Witness)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சுப்பிரமணியன் | வயது | : | 55 |
| தந்தை பெயர் | : | ஆறுமுகம் | தாலுகா | : | புதுக்கோட்டை |
| கிராமம் | : | கல்லுக்காரன்பட்டி | தொழில் | : | விவசாயம் |

Solemly affirmed by Tmt. Vijayalakshmi, Junior Assistant of this court in accordance with the provisions of Act X of 1873.
**Counsel present.**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2025/F1. DATED 21.02.2025 the identify of the witness verified with their identity card.**
**Aadhar Card of the Witness verified.**

(1 முதல் 5 எதிரிகள் ஆஜர் இல்லை. அவர்களது சார்பில் பிரிவு 355 BNSS- ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது)

**சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு**

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். எதிரிகள் சரவணன், உதயசூரியன், வினோத், பிரபாகரன், ராமன், குமார் ஆகியோரை எனக்கு தெரியும். அ.சா.1 முத்து மற்றும் சாட்சி கருப்பையாவை எனக்கு தெரியும். கடந்த 22.09.2021 காலை 08.30 மணியளவில் நானும் காமராஜ் என்பவரும் சொந்த வேலையாக இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தோம். அப்போது புதூரில் சித்திரவேல் வீட்டிற்கு அருகில் கூட்டமாக இருந்தது. பைப் போடுவது சம்மந்தமாக சித்திரவேல் முத்துவிடம் ஏதோ பேசியுள்ளார். அதற்கு முத்து பைப் அமைத்து தருவதாக சொல்லி உள்ளார். அப்போது அங்கு வந்த எதிரி சரவணன் முத்துவை பார்த்து உனக்கு இங்கு என்ன வேலை புண்டை மகனே என்று அசிங்கமாக பேசினார். பின்னர் அவரது சட்டையை பிடித்து இழுத்து கட்டையால் முத்துவின் இடது பக்க தோளிலும், மார்பிலும் அடித்துவிட்டார். அப்போது உதயசூரியன் அங்கு வந்து முத்துவை அசிங்கமான வார்த்தைகளால் பேசி, அவரது சட்டையை பிடித்து இழுத்து கிழித்து கட்டையால் முத்துவை அடித்துவிட்டார். அப்போது கருப்பையா விலக்கிவிட்டபோது எதிரி உதயசூரியன் கருப்பையாவை கட்டையால் இடது மார்பிலும், இடது பக்க கண்ணுக்கு கீழும் அடித்துவிட்டார். எதிரிகள் ராமன், குமார், வினோத், பிரபாகரன் ஆகிய நால்வரும் முத்துவை அடித்தார்கள். சத்தம் கேட்டு ஊர் ஆட்கள் அனைவரும் வந்துவிட்டார்கள். அப்போது சரவணனும், உதயசூரியனும் கட்டையை கையில் வைத்து கொண்டு உங்களுக்கு எங்கள்

கையால் தான் சாவு என்று மிரட்டிவிட்டு அங்கு இருந்து ஓடிவிட்டார்கள். காயமுற்ற முத்து மற்றும் கருப்பையாவை கார் மூலமாக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். மேற்படி 6 நபர்களில் ராமனை தவிர மற்ற அனைவரும் கல்லுக்காரன்பட்டி கிராமத்தை சேர்ந்தவர்கள் ஆவார்கள். அவர்கள் எதற்காக புதூர் கிராமத்திற்கு சென்றார்கள் என்று தெரியவில்லை. பிரச்சனை செய்வதற்காக சென்று உள்ளார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். போதிய வாய்ப்பு அளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

**மறுவிசாரணை– இல்லை.**

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம், என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு, விளக்கி கூறப்பட்டு, சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.**

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.05.27 03:35:33 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வக்கோட்டை.**